

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (21.07.2016) நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. சந்திரசேனன் நாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வளம்) திரு.சுப்பிரமணியன் ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண் : 465/2016 நாள்: 21.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில்,**
**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**
**இன்று (21.07.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்ட அரங்கில் இன்று (21.07.2016) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 18.07.2016 அன்று பேச்சிப்பாறை அணையின் நீர்மட்ட இருப்பு 41.40 அடியும், பெருஞ்சாணி அணையின் நீர்மட்ட இருப்பு 65.60 அடியும், சிற்றார்-1 அணையின் நீர்மட்ட இருப்பு 14.53 அடியும், சிற்றார்-2 அணையின் நீர்மட்ட இருப்பு 14.63 அடியும், பொய்கை அணையின் நீர்மட்ட இருப்பு 16.80 அடியும், மாம்பழத்துறையாறு நீர் மட்ட இருப்பு 54.12 அடியும் உள்ளது.

18.07.2016 அன்று வரை வேளாண் விரிவாக்க மையம் மூலம் 20.710 (மெ.டன்) பரப்பில் நெல் பயிறு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 01.04.2016 முதல் 18.07.2016 முடிய 12095 நெட்டை ரக தென்னங்கன்றுகளும், 8587 நெட்டை குட்டை ரக தென்னங்கன்றுகளும், 429 குட்டை நெட்டை ரக தென்னங்கன்றுகளும் ஆக மொத்தம் 21,111 தென்னங்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தடையின்றி உரம் விநியோகிப்பதற்காக டான்பெட் நிறுவனத்தில் 507 மெட்ரிக் டன்னும், கூட்டுறவு சங்கங்களில் 2171 மெட்ரிக் டன்னும், உற்பத்தியாளர்களிடம் 800 மெட்ரிக் டன்னும், தனியார் விற்பனையாளர்களிடம் 1728 மெட்ரிக் டன்னும் ஆக மொத்தம் 5206 மெட்ரிக் டன் உரம் இருப்பில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. பின்னர் கடந்த மாதம் நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கை மனுக்கள் மீது பதில்கள் வாசிக்கப்பட்டது.

கொடுப்பைக்குழி கிளைக்கால்வாய் மூன்றாவது மடையிலிருந்து செல்லும் நீர் புல எண் 391/14 பட்டா நிலத்தின் வழியாக செல்கிறது. மேற்படி புல எண் தொடர்பாக, இரணியல் நீதிமன்றத்தில் ஒ.எஸ்.1/2012 வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே நீதிமன்ற வழக்கு முடிவை எதிர்நோக்கி ஆக்கிரமிப்பு அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி கிராமத்திற்குட்பட்ட புத்தேரி பெரியகுளத்தின் கரையை ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற விரைவில் சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், தெங்கம்புதூர் பேரூராட்சிக்குட்பட்ட தெங்கம்புதூர் கடைவரம்பு சானலுக்கு வரும் தெங்கம்புதூர் காட்டுவிளை வழியாக குறுக்கே வரும் பாதை பேரூராட்சிக்கு சொந்தமாமன பாதையாகும். இப்பாதை தற்போது தார் சாலையாக இருந்து வருகிறது. இச்சாலை சரி செய்ய உத்தேச மதிப்பீடு ரூ.9,50,000/- ஆகும். அரசிடம் இருந்து சிறப்பு நிதி ஏதேனும் ஒதுக்கப்பட்டால் முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், ஆலங்கால் ஓடையில் பழுதடைந்துள்ள தடுப்பணைகள் வரும் நிதி ஆண்டில் நிதி ஆதாரத்தைப் பொறுத்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், கோதநல்லூர் கிராமம் பாவரிகுளம் என்ற பாதிரிகுளத்தின் மறுகால் வரும் நிதி ஆண்டில் நிதி ஆதாரத்தைப் பொறுத்து சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், உள்ளங்குழி குளத்திற்கு தண்ணீர் செல்லும் கால்வாயின் நில ஆர்ஜிதம் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கு முடிவுற்றபின் கால்வாய் அமைத்து,

உள்ளங்குழிகுளம், பனங்குளம், பாப்பாங்குளம் போன்ற குளங்களுக்கு தண்ணீர் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பெரும் மழையினால் இனியூர்குளத்திற்கு தண்ணீர் செல்லும் ஷட்டர் சேதம் அடைந்துள்ளதால் அதனை சரிசெய்யும் பணிக்கு நிதி கோரப்பட்டுள்ளது. நிதி கிடைக்கப்பெற்றவுடன் பணி மேற்கொள்ளப்படும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப, அவர்கள் விவசாயிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, இணை இயக்குநர் (வேளாண்மைத்துறை) திரு. சந்திரசேனன் நாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வளம்) திரு.சுப்பிரமணியன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.